தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# அழிவின் விளிம்பில் உள்ள மர இனங்களை மீட்போம்

## மரபெருக்கு நிறுவனம் தகவல்

**கோவை, டிச. 5–**

காடு அழிப்பு, சட்ட விரோத கடத்தல், சூழலியல் சீர்கேடுகளால் சில மர வகைகள் அழிவின் விளிம்பில் உள்ளன.

அதுபோன்ற அரிய வகை மரங்களை மீண்டும் மீட்டெடுப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக, கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன இயக்குனர் குன்னி கண்ணன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

எங்கள் நிறுவனத்தின் விஞ்ஞானிகளின் பெருமுயற்சியால் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அவற்றில், அழிந்து வரும் மர இனங்களை மரங்களை மீட்டெடுத்து, பாதுகாப்பதும் ஒன்று.

செம்மரம், அசோகம், வெண்குங்கிலியம், கருப்பு குங்கிலியம் உள்ளிட்ட அழிவின் விளிம்பில் உள்ள மரங்களை மீட்க திட்டமிடப்பட்டுள்ளது.

வனப்பகுதிக்குள்ளேயே இம்மரங்களின் நாற்றுகளை நட்டு வளர்ப்பது, பிறிதொரு பகுதியில் நாற்றுகளை வளர்த்து, பிறகு வனப் பகுதிக்குள் நடவு செய்வது என வெவ்வேறு முறைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

திட்டத்தை செயல்படுத்த, ஈடுசெய் காடுவளர்ப்பு நிதி (கேம்பா நிதி) கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கப்பட்டதும் பணிகள் துவக்கப்படும்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

### கேரளத்தில் ஆய்வு

குன்னிகண்ணன் மேலும் கூறுகையில், "கேரள அரசு, ஆற்றங்கரையோர புனரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. ஆற்றங்கரையோரம் உள்ள அன்னிய மரங்களை அகற்றிவிட்டு, அப்பகுதி மண்சார்ந்த மரங்களை வளர்த்து வருகிறது.

இத்திட்டத்தை மதிப்பீடு செய்ய, கோவை, வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தை அணுகியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டு முடிவுகள் நமது பகுதிக்கும் உதவியாக இருக்கும்" என்றார்.

72. News in Dinamalar, 05.12.2021, Coimbatore, Plan of action to rescue the tree species that are on the verge of extinction by IFGTB.